செய்தி வெளியீடு எண்: 70 நாள் : 22.01.2011

# விருதுநகர் வெடிவிபத்தில் மரணமடைந்த எட்டு பேரின் குடும்பங்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாய் நிதியுதவி!

# முதலமைச்சர் கலைஞர் ஆணை!

விருதுநகர் மாவட்டம், விருதுநகர் வட்டம், கன்னிசேரி புதூர் கிராம உட்கடை தியாகராஜபுரம் கிராமத்தில் அமைந்துள்ள ''ராஜஶ்ரீ கண்ணா பயர் ஒர்க்ஸ்'' என்ற வெடிபொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலையில் 21.1.2011 அன்று காலை 10.30 மணியளவில் மருந்து கலவை அறையில் ஏற்பட்ட வெடிவிபத்தில் சிக்கி எட்டு நபர்கள் உயிரிழந்ததாகவும், 12 நபர்கள் காயமடைந்து, மருத்துவமனையில் மேல் சிகிச்சை பெற்று வருவதாகவும் தகவல் அறிந்து மிக்க துயருற்ற மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், இந்த சம்பவத்தில் உயிரிழந்தோர் ஒவ்வொருவரின் குடும்பத்திற்கும் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளதோடு, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு இலட்சம் ரூபாய் வீதம் நிவாரணத் தொகையாக வழங்கிடவும், காயம் அடைந்தவர்கள் ஒவ்வொருவருக்கும் தலா பத்தாயிரம் ரூபாய் வழங்கிடவும் இன்று (22.1.2011) ஆணையிட்டுள்ளார்.

வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், செ–9.